# ரேணுகா தேவி

## சாந்திப்பிரியா



ரேணுகா தேவி தேவி இந்துக்களின் தெய்வம். இவரை கர்நாடகா, மகாராஷ்டிரா, தெலுங்கானா, ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டில் பலரும் வழிபடுகிறார்கள். ரேணுகா தேவியை எல்லம்மா என்ற பெயரில் அழைத்து கர்நாடகா மற்றும் ஆந்திர பிரதேசத்தில் அவளை ஆராதிக்கின்றார்கள். பொதுவாக ரேணுகா தேவி மாரியம்மன் குடும்பத்தை சேர்ந்த தெய்வம் ஆவார். மாரியம்மன் என்பது பார்வதி தேவியின் அவதாரமே ஆகும். மகாராஷ்டிராவின் மஹூரில் உள்ள ரேணுகா தேவியின் ஆலயம் சக்தி பீடத்தில் ஒன்றாக கருதப்படுகிறது.

ரேணுகா தேவி தேவி யார்? ரேணுகா தேவி என்பவர் பகவான் பரசுராமரின் தாய் ஆவார். பகவான் தத்தாத்ரேயர் அவளை

காயத்ரி தேவி என்று புகழ்ந்தார். அவள் மிகவும் தாராள மனப்பான்மையுடையவர். அவள் பிறப்பு குறித்து கூறப்படும் ஒரு புராணக் கதை உள்ளது. பிரம்மாவின் வேண்டுகோளுக்கிணங்க, பார்வதி தேவி விதர்பா மன்னரான எரைவதா மகாராஜாவுக்குப் பிறந்தார். அந்த மன்னன் தனக்கு ஒரு பெண் குழந்தையை வேண்டும் என்பதற்காக ஒரு யாகம் செய்தார். அதனால்தான் பகவான் பிரும்மா இந்த ஏற்பாட்டை செய்தார். அதற்கும் ஒரு காரணம் இருந்தது. முன் ஒரு காலத்தில் பார்வதி தேவியார் பெற்று இருந்த சாபத்திற்கு விமோசனம் பெற வேண்டும் என்பதற்காகவும், அப்படி பூமியில் அவர் பிறப்பு எடுப்பதில் மூலம் மனித குலத்துக்கு நன்மை தரும் ஒரு பெண் தெய்வத்தை பூமியில் பார்வதி தேவியின் அவதாரமாக வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகவும் பகவான் பிரும்மா அப்படி செய்தார். எரைவதா மகாராஜாவுக்கு பிறந்த குழந்தைக்கு ரேணுகா என்று பேயர் சூட்டினார்கள். மெல்ல மெல்ல வளர்ந்தவர் திருமண வயதை எய்தினார். அவர் தனக்கு பொருத்தமான கணவர் வேண்டும் என்பதற்காக தனக்கு பொருத்தமானவரை தானே தேடித் கொள்ள வேண்டும் என்று எண்ணி பெரிய படைகளுடன் நாடு முழுவதும் சுற்றித் திரிந்தபோது குண்டலிபுரத்தில் தவத்தில் அமர்ந்து இருந்த ஜமதக்னி எனும் முனிவரை சந்தித்தார்.

வனத்தில் தவத்தில் இருந்த முனிவர் அருகில் சென்றபோது முனிவரின் சீடர்களுக்கும் ரேணுகாவின் படையினருடனும் ஏற்பட்ட சிறிது கைகலப்பிற்குப் பிறகு அங்கு வந்த அகஸ்திய மாமுனி , முனிவர் ஜமதக்னி அவளுக்கு வாழ்க்கையில் சிறந்த பங்காளியாக இருப்பார் என்று சொன்னபோது அவள் அதை ஏற்றுக் கொண்டாள். ஆகையால் முனிவர் ஜமதக்னியை சந்தித்து அகஸ்திய முனிவரிடமிருந்து தனக்குக் கிடைத்த செய்தியை வெளிப்படுத்திய பின்னர், அவருடன் திருமணம் செய்து கொள்ள

ஜமதக்னி முனிவரை அணுகினாள். அதை ஏற்றுக் கொண்ட முனிவரும் அவளை மணப்பதற்கு இசைவு தெரிவித்தப் பின்னர் அவளை மணந்தார். திருமணம் நடைபெறுவதற்கு முன்னால் பார்வதி தேவியின் சாப விமோசனமும் விலகியது. ஆகையால் பார்வதி தேவி தற்காலிகமாக குடி இருந்த ரேணுகாவின் உடலில் இருந்து வெளியேறிச் சென்று விட்டு தன் இடத்தில் தன்னுடைய சக்தியில் இருந்து வெளியான ஒரு தேவகணத்தை அமர வைத்து விட்டாள். ஒவ்வொரு தெய்வமும் பல்லாயிரக்கணக்கான சக்தி கணங்களை தன்னுள் கொண்டவை. அவ்வப்போது அவற்றில் இருந்து பல துணை தெய்வங்களை அந்தந்த தெய்வங்கள் வெளிப்படுத்தும் என்பது ஐதீகம். பார்வதி தேவியின் சக்திக் கதிரில் இருந்து வெளியான தேவகணத்தின் ஆத்மாவுடன் இருந்த ரேணுகா தான் மணந்து கொண்ட முனிவரின் விரும்பியபடி உயர்ந்த பத்தினியாக வாழலானாள். தார்மீக தரத்தை பராமரித்து அவருக்கு எல்லா வகையிலும் சேவை செய்தார். பரசுராமர் உட்பட அவர்களுக்கு சில குழந்தைகள் பிறந்தன என்றாலும் அவர்களைப் பிரிக்க விதி சதி செய்தது. அதுவரை அவர்கள் இருவரும் முழு அளவிலான மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர்.

தினமும் நதிக்கு சென்று தனது கற்பின் சக்தியினால் வேகாத மண் பாத்திரத்தில் நீரை நிறப்பி, ஒரு பாம்பை கயிற்றை போல சுருட்டி வைத்து அதன் மீது மண் பாண்டத்தை வைத்து எடுத்து வருவது உண்டு. ஒரு நாள் வழக்கம் போல் ரேணுகா தேவி குளிக்க ஆற்றங்கறைக்கு சென்றார். திடீரென்று, தூரத்தில், வேறொரு நாட்டு மன்னன் தன் மனைவியுடன் உல்லாசமாக அவளை கட்டி அணைத்தபடி காதலை வெளிப்படுத்திக் கொண்டு அதே ஆற்றில் குளிப்பதைக் கண்டாள். அவர்களது காதல் லீலைகளை நதியின் நீரில் நிழலாகக் கண்டவள் மனதில் கண் இமைக்கும் நேரத்தில் காமம் தோன்றியது. அவர் எத்தனை அழகாக இருக்கின்றார் என

எண்ணினாள். எண்ணத்தில் காமம் தோன்றி மறைந்தது. தன் நிலைக்கு வந்தவள் மண் பாத்திரத்தில் நீர் பிடிக்க முயன்றபோது பானை உடைந்து விழுந்தது. ஒரு பாம்பு கூட கயிறாக பயன்படுத்த கிடைக்கவில்லை.

தன் கற்பை மானஸீகமாக இழந்து விட்டது போல உணர்ந்தவள் கவலையுடன் ஆசிரமத்திற்கு திரும்பினாள். ஜமதக்னி முனிவர் நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் தனது யோக சக்தியின் மூலம் தெரிந்து கொண்டார். அவள் மானஸீகமாக தனது கற்பு இழந்து விட்டாள் என எண்ணினார் . கோபமுற்றவர் தனது மகன்களை அழைத்து ரேணுகா தேவியின் தலையை வெட்டி எரியுமாறு கட்டளையிட்டார். அவரது கட்டளைகளை நிறைவேற்ற மகன்கள் தயக்கம் காட்டியதால், மேலும் கோபமுற்ற ஜமதக்னி முனிவர் முடிவாக தனது கடைசி மகனான பகவான் பரசுராமரிடம் அவரது தாயின் தலையை வெட்டி எரியுமாறு கட்டளையிட்டார். பகவான் பரசுராமர் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, ஒரு கணமும் சிந்திக்காமல் தனது தாயார் ரேணுகாவின் தலையை துண்டித்து எறிந்தார். உடனடியாக தனது தாயின் தலையைத் துண்டித்ததற்காக தனது கையையும் துண்டித்துக் கொண்டார். பின்னர் அவர் தனது தந்தையிடம் சென்று தனது தாய் மீண்டும் உயிர் பிழைக்க வரம் கேட்டார். தனது மகனின் உத்தமமான குணத்தினால் மகிழ்ச்சி அடைந்த ஜமதக்னி முனிவர் அவரது வேண்டுகோளுக்கு இணங்க, தனது கமண்டலத்தில் இருந்து நீரை எடுத்து தண்ணீரைத் தெளிக்க பகவான் பரசுராமரின் துண்டிக்கப்பட்ட கை மீண்டும் அவர் உடலுடன் இணைந்தது. அதை போலவே துண்டிக்கப்பட்டு இருந்த தலை மீதும் தெளிக்க ரேணுகாவும் அவளுடைய உண்மையான வடிவத்தை திரும்பப் பெற்றாள், ஆனால் பாவத்தை செய்திருந்த ஒரு பெண்ணின் உடலில் அவள் தலை இணைந்து கொண்டது. அதன்பிறகு உயிர்

பிழைத்து எழுந்த ரேணுகா மீண்டும் ஆசிரமத்தில் சென்று அந்த முனிவருக்கு தனது சேவையைத் தொடர்ந்தார். பல ஆண்டுகளுக்குப் பிறகு ஜமதக்னி முனிவர் காத்தவீர்யன் என்பவனால் கொல்லப்பட்டபோது அவரை பரசுராமர் தகனம் செய்தார். ரேணுகாவும் ஜமதக்னி முனிவரின் சிதையில் விழுந்து தற்கொலை செய்ய முயன்றாள்.

ஆனால் திடீர் என கடுமையாக பெய்த மழையினால் சிதையின் தீ அணைய அதில் இருந்து உடல் முழுவதும் கொப்பளங்களுடன் ரேணுகா வெளி வந்தாள். அப்போது சிவபெருமான் அங்கு தோன்றி ஜமதக்னி முனிவரை உயிர் பிழைக்க வைத்து சொர்கத்துக்கு அனுப்பினார் ரேணுகாவை 'அவள் தலை மட்டுமே பூமியின் மேல் காணப்படும் தெய்வமாக மாறி அம்மை, காலரா போன்ற கொடிய வியாதிகளை குணப்படுத்தும் தெய்வமாக இருப்பாள். அது மட்டும் அல்ல மழை பெய்யாத நேரத்தில் மழையையும் பெய்ய வைக்கும் வைக்கும் சக்தியையும் கொண்டு இருப்பாள்' என வரம் தந்து அவளை தெய்வமாக்கினார். இதனால்தான் பெரும்பாலும் அகம முறை வழிபாடு இல்லாத ஆலயங்களில் ரேணுகா தேவி மாரியம்மனின் அம்சமாக வழிபடப்பட்டு வருகின்றார். மேலும் மண்புத்துக்கள் உள்ள இருந்து வெளிவந்தே பல இடங்களில் கழுத்து வரை தெரியும் காட்சியில் ஆலயங்களில் காணப்படுகின்றார் என்றாலும் பிற்காலத்தில் முழு வடிவத்திலான தோற்றத்திலும் பல்வேறு பெயர்களில் பல்வேறு ஆலயங்களில், பல்வேறு வரலாற்று காரணங்களினாலும் அமர்ந்து இருக்கின்றாள்.

# Renuka Devi Temple

## Santhipriya





Goddess Renuka Devi is a Hindu goddess worshipped predominantly in Karnataka, Maharashtra, Telangana, Andhra Pradesh and Tamil Nadu.  She is worshipped as Yellamma in most parts of Karnataka and Andhra Pradesh. She is one of the Goddesses in the group of Goddess Mariyamman. Goddess Mariamman is an incarnation of Goddess Parvathi. Goddess Renuka's temple at Mahur in Maharashtra is considered one of the Shakti piths.

Who is Goddess Renuka Devi? Goddess Renuka is the mother of Lord Parasurama. Lord Dattathreya praised her as Goddess Gayathri. She is very generous in granting boons. There is a puranic story on her birth. Once Lord Brahma, requested Goddess Parvathi to take birth as daughter of Eraivadha Maharaja, the King of Vidharpa who wanted a girl child and performed a Yagna for it. There was a background reason for Lord Brahma to make such request. Goddess Parvathi has to be born a human to atone a sin she had committed and the second reason is through her a female divine was to be manifested on earth for the welfare of mankind. Goddess Parvathi agreeing to the request of Lord Brahma got birth on earth as child of Eraivadha Maharaja. She was named as Renuka who grew and attained marital age, when she herself began to search for a suitable alliance to her and went all over the nation with a huge army. She met sage Jamadagni in Kundalipuram, where the saint was doing penance. After some skirmish with his disciples and her army, they cooled down when Lord Agasthia who came there and told her that Saint Jamadagni would be her best partner in life. Therefore she approached sage Jamadagni with request to marry him revealing the advice that she had received from sage Agasthia and sage Jamadagni had no hesitation in agreeing to the proposal to marry her. Just before the marriage took place, Goddess Parvathi who was in her body came out from her body replacing it with another soul released from her divine rays since the period of atonement for Goddess Parvathi ended. Renuka with

the soul of a devaganas from the power rays of Goddess Parvathi remained very faithful and devoted wife of sage Jamadagni maintaining high moral standards in life as desired by the sage and served him in all respects. Some children were born to them, including Parasurama. Both of them lived in full happiness, till the fate played its wicked role to separate them.

She used to collect water in unbaked mud pots, keeping it over her head with a snake coiled as rope, all of which she used to get by the power of her chastity.  One day as usual Renuka went to the river bank to take bathe. Suddenly, at a distance, she saw the king of another country bathing with his wife in the same river. They were in merry making, hugging each other. The moment she accidently saw their play in the form of image inside the river water, in wink of moment lust overpowered her mind, when she wondered at the handsome and youthful appearance of the King and his wife. As she was distracted, she lost her power of collecting water in unbaked pots. She lost the water which she had collected and the pot too broke and not even a snake could be found to use as rope. Disappointed by this development, she returned to the ashram in worry.

Sage Jamadagni saw all the events that had happened through his yogic power and became furious as according to him she had lost her chastity. He angrily ordered his sons to cut off the head of

Renuka. Since the sons were reluctant to carry out the orders of his order, Saint Jamadagni got furious and finally ordered his son Parasurama to severe the head of his mother. Parasurama obeyed the orders and severed the head of his mother Renuka without a wink of second, and also severed his own hand for having severed the head of his mother. Then he returned to his father and asked for a boon to bring his mother alive. Pleased with the obedient act of his son, Saint Jamadagni yielded to his request and sprinkled water from his Kamandal reciting mantras and the severed hand of Lord Parasurama joined back again. He also gave the same water to him to sprinkle on the severed head of the slain mother who too gained back her true form but on the body of a sinner female. Thereafter Renuka continued to render her service to the sage at the Ashram.

After many years when Saint Jamadagni was done to death by one Kathaveeryan he was cremated by Lord Parasurama. Renuka too jumped into the funeral pyre to commit suicide, when heavy rain extinguished the fire. Renuka arose from the fire with boils all over her body and dressed in neem leaves. Lord Siva appeared and resurrected Saint Jamadagni and sent him to heaven. Lord Shiva blessed Renuka to turn into female divine as Goddess Renuka and remain in this world as 'Goddess Renuka to appear with her head alone' and cure people afflicted with chicken pox, small pox and measles like diseases and also gave her power to induce rain

whenever needed. Therefore she is considered to be the Goddess- an aspect of Goddess Parvathi- to cure dreaded diseases like small, chicken poxes and giver of rain and mostly enshrined in separate temples worshipped in non-agamic manner.

Although she is mostly seen in temples in the appearance up to the neck, in many other newly established temples, she is seen in full form, with different facial appearances.